பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 24 செவ்வாய்க்கிழமை 09.08.2022 கதிர் 277

### இனி இது ரகசியம் அல்ல!

இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தேன். அவர் 'ஹலோ' சொன்னதும் என் முதல் கேள்வி இப்படி அமைந்தது:

"நீங்கள் கறுப்பு ஆடா அல்லது வெள்ளை ஆடா?" ☞2

# கப்பல் வருகை தடுக்கப்பட்டதால் இந்தியாவின் மீது சீனா காய்ச்சல்!

## புதுடில்லியின் அழுத்தத்தைக் கண்டிக்கிறது பெய்ஜிங்



கொழும்பு, ஓகஸ்ட் 09

சீனாவின் உயர்தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு வந்து தரிக்கும் ஒழுங்கைத் தள்ளிவைக்கும்படி இலங்கை சீனாவைக் கோரியமையை அடுத்து, அது விடயத்தில் இந்தியா மீது கடுமையாகக் காய்ந்திருக்கிறது சீனா.

பாதுகாப்புப் பிரச்சினையைக் காரணம் காட்டி கொழும்பிற்கு புதுடில்லி அழுத்தம் கொடுப்பது அர்த்தமற்றது என்று பெய்ஜிங் நேற்றுக் கண்டித்திருக்கின்றது. ☞2

## அணிசேராக் கொள்கையை கோட்டை விட்டு விட்டீர்களா?



### கப்பல் விடயம் தொடர்பில் விமல் கேள்வி

சீனக் கப்பல் விடயத்தில் இலங்கை அணிசேரா கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, அதைக் கோட்டை விட்டு விட்டீர்களா ☞2

## கோணேஸ்வரத்தை - காப்பாற்றுங்கள்! -

### ஆறு.திருமுருகன் மன்றாட்டம்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 09

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தொல்லியல் திணைக்களம் முட்டுக்கட்டையாக இருப்பதுடன், தற்போது அவர்களின் அனுமதியுடன் சுற்றாடலில் வேற்றினத்தவர்களின் தற்காலிகக் கடைகளை நிரந்தரமாக்குகின்ற செயற்பாடுகளும் கனகச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. இதுதொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து செயற்பட்டு இதற்கு எதிராகக் குரல் கொடுத்துத் தடுத்து நிறுத்தவேண்டும். ☞2

## இன்றைய விகாரமஹாதேவி பூங்கா போராட்டத்துக்குத் தடை இல்லை!

வெகுஜன அமைப்புக்கள் மற்றும் அரசியல்கட்சிகள் இணைந்து கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் இன்று நடத்தவிருக்கும் போராட்டத்துக்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதுவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கறுவாத் தோட்டம் பொலிஸார் நேற்று விடுத்த ☞2

## எரிவாயு சிலிண்டர் விலை 246 ரூபாவினால் குறைப்பு

கொழும்பு , ஓகஸ்ட் 09

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிவாயுவின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. ☞2

## ஜனாதிபதி ரணிலின் உரை மீது இன்று நாடாளுமன்றில் விவாதம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான நாடாளுமன்ற விவாதம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் 01 மணிக்கு கூடவுள்ளது. இந்த விவாதம் நாளை புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது. ☞2

## காலிமுகத்திடல் போராட்டம் இன்று மக்கள் வராவிட்டால் நிறுத்தப்படுமாம்

### களத்தில் தங்கியுள்ள தேரர் திட்டவட்டம்



கொழும்பு , ஓகஸ்ட் 09

காலிமுகத்திடல் போராட்டத்திற்கு மக்கள் இன்று வராவிட்டால் தானும் ஏனைய மக்களும் அந்த இடத்தை விட்டு வெளியேறுவந்ர்கள் என போராட்ட களத்தில் தங்கியுள்ள வணக்கத்திற்குரிய தம்ம சுஜாத தேரர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

இந்தப் போராட்டக் களத்தில் முதலில் இருந்த கூட்டத்தையும் இன்று எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் அவதானியுங்கள்.

நாளை (இன்று) ஓகஸ்ட் 9 ஆம் திகதி, இந்த மண்ணில் இதுவரை நடத்திய போராட்டத்திற்கு பலன் கிடைக்காவிட்டால் இதை நாம் உடன் நிறுத்துவோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது முட்டாள்தனம் என்கின்றார் வாசுதேவ!



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என கூறுபவர்கள் முட்டாள்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விமர்சித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியம் 1978 ஆம் ஆண்டு முதல் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்பை தெளிவாக அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

## பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு!

### அம்பிகா சற்குணநாதன் சார்பில் தாக்கல்

இலங்கையின் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை ஆட்சேபித்து மனித உரிமை ஆர்வலர்கள் இருவர், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் மற்றும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் முன்னாள் ஆணையாளர் மிராக் ரஹீம் ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு மாறாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களை தற்காலிகமாக இரகசியக் காவலில் வைத்திருப்பதற்கான நிர்வாக நடைமுறையின் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இது என் கேள்வி. அவர் சிரித்தார்.

“கறுப்பு ஆடு குறித்துப் பிரஸ்தாபித்தவர் தொடர்பில் பழமொழி ஒன்றில் பதில் தரவா?” – என்று கேட்டார் அவர்.

“நல்லது தாருங்கள்!” – என்றேன்.

“சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டுதாம்!” – என்று சொல்லி நிறுத்தினார் அவர்.

“முழுக் கருப்பு ஆடு, வேறு கறுப்பு ஆடுகள் பற்றி கனைக்கிறது. விட்டு விடுங்கள்” – என்றும் அவர் சொன்னார்.

வழக்கமாக என் கருத்துக்களை ஆலோசனைகள் போலக் கேட்கக் கூடியவர். இவ்விடயத்தை ஒட்டியும் நான் என் கருத்துக்களைச் சொன்னேன். அவர் செவிமடுத்தார். அவற்றை வாசகர்களோடும் பகிரலாம் என்று எண்ணுகிறேன்.

“பழைய நிலைமை இல்லை இது. கோடு தெளிவாகக் கீறப்பட்டு விட்டது. தமிழரசின் பிளவு உச்சமாக இருப்பதை வைத்து வெளித்தரப்புகள் இடையில் புகுந்து விளையாடித் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டன. தமிழரசை முந்தும் வேளை வந்து விட்டதாக அவை நேரத்தை கணக்கிட்டுள்ளன. அதற்கேற்ப அவை காய் நகர்த்துகின்றன என்பதுதான் அர்த்தம். முழுத் தமிழரசையும் கறுப்பாடுகளாக்கும் சூழ்ச்சித் திட்டம் கட்டவிழ்கின்றது. மாவிட்டபுரத்துக்கு இது புரியப் போவதில்லை. தன் தலைமை பற்றிய சிந்தனை மட்டுமே அதற்கு. தமிழரசு எக்கேடு கெட்டாலும் அதற்குக் கவலை இல்லை. அது திருந்தவும் மாட்டாது; கட்சியைத் திருத்தவும் மாட்டாது. தமிழரசுப் பிளவில்தான் கூட்டுப் பங்காளிகள் அரசியல் பிழைப்பு நடத்த வியூகம் வகுக்கிறார்கள். ஒன்றில் துணிச்சலாகக் கறுப்பு ஆடுகளை வெளியே விட வேண்டும். இல்லையேல் கறுப்பு ஆடுகளிடமே கட்சியை ஒப்படைக்க வேண்டும். முதலாவது செய்வதற்குத் திராணி இல்லை. இரண்டாவது செய்வதற்குப் பதவி ஆசை விடாது. தமிழரசு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து, ஒரு கட்டுக்கோப்புக்குள் உறுதியாகச் செயல்பட வராவிட்டால், அது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகிவிடும். தமிழரசை அடிப்பதற்காக முன்னாள் விடுதலை புலிகள் போராளிகள் மீது பங்காளிக் கட்சித் தலைவருக்கு அதீத பரிவு, பற்றுப் பாசமெல்லாம் பிறந்திருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது. யுத்தம் முடிந்து இந்த 13 வருடங்களாக முன்னாள் போராளிகளை மட்டுமல்ல, இந்த மண்ணின் மீதான பற்றுதலோடு, மண்ணில் நின்று பிடித்தவர்களைக் கூட சம்பந்தன், மாவையுடன் சேர்ந்து உதாசீனம் செய்த கில்லாடிகளில் தானும் முக்கியமானவர் என்பதை மறந்து, அவர் புதுப் புராணம் பாடுகிறார். மற்றையவர்களைக் கருப்பு ஆடு என்கிறார் அவர். சரத் பொன்சேகா தேர்தல், சஜித் தேர்தல் என்று ரணிலின் ஜனாதிபதி தேர்தல் வரை மறைவில் கைமாறியமை பற்றிய விடயங்கள் அம்பலத்துக்கு வராது என்ற துணிச்சலில் அலிபாபாக்களின் பேச்சு கட்டவிழ்கின்றன” – என்றேன்.

“நான் கடைசியாக நீங்கள் கூறிய ‘சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு எண்டதாம்’ என்ற பழமொழியைத் திருத்த விரும்புகிறேன்” – என்றேன்.

“எப்படி...?” என்று வினவினார் அவர்.

“சட்டியைப் பார்த்துக் கறுப்பு எண்டதாம் காரிருள்” என்றேன் நான். அவர் சிரித்தார்.

(மின்னல்)

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ள சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கு நிபந்தனைகளை விதிப்பது மேலும் வீழ்ச்சியை நோக்கி நாடு செல்வதை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சர்வதேச நாணய நிதிய நடவடிக்கைக்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது எனவும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தாய்வான், தாய்லாந்து மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உள்நோக்கங்களை அறிந்து கொண்டமையின் காரணமாக அதன் நிபந்தனைகளை நிராகரித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை சமநிலைப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## எரிவாயு சிலிண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 246 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 4,664 ரூபாவாகும்.

அத்துடன், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 99 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,872 ரூபாவாகும்.

இதேவேளை, 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண் டரின் விலை 45 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 859 ரூபாவாகும்.

## அணிசேராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சீனக் கப்பலான யுவான் வாங் 5, அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருவதை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம் சீனத் தூதரகத்திற்கு அறிவித்துள்ளமை தொடர்பிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்தக் கப்பலின் வருகைக்கு இந்திய அரசாங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து இலங்கை அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்நிலையில் இந்தோ – பசுபிக் பிராந்தியத்திற்காக சீனாவுக்கான கதவை மூடுவது இலங்கையின் அணிசேராக் கொள்கைக்கு இணங்குகிறதா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் நெருக்கடியானது இந்தோ – பசுபிக் நிகழ்ச்சி நிரலுக்கு நாட்டை முற்றாக அடிபணியச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன் இலங்கையைப் பலிகடா ஆக்குவதற்கு பஸில் ராஜபக்ஷ தலைமையிலான பிரசாரத்தில் இருந்து தற்போதைய அரசாங்க நிர்வாகமும் தப்பவில்லை என்று விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான தீர்மானங்கள் அன்றிலிருந்து ஒவ்வொரு இக்கட்டான தருணத்திலும் இலங்கைக்கு நட்புக் கரம் நீட்டிய நல்ல நண்பனான சீனாவுடன் இராஜதந்திரப் பிரச்சினைகளையே ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## கப்பல் வருகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓகஸ்ட் 11 முதல் 17 வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்த திட்டமிடப்பட்ட சீன விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு ஆராய்ச்சிக் கப்பலான ‘யுவான் வாங் 5’ அங்கு வருவதை ஒத்திவைக்குமாறு பெய்ஜிங்கை இலங்கை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தச் செய்திகளுக்கு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பதிலளித்த சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் சீனா இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டுள்ளது என்றார். ,

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை இரு நாடுகளும் சுயாதீனமாகத் தெரிவு செய்து பொதுவான நலன்களைப் பூர்த்தி செய்து முன்னெடுக்கின்றன. இது எந்த மூன்றாம் தரப்பினரையும் குறிவைக்கவில்லை. பாதுகாப்புக் கவலைகளை மேற்கோள் காட்டி இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது அர்த்தமற்றது” – என்று அவர் கூறினார்.

இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு. அதன் சொந்த வளர்ச்சி நலன்களின் வெளிச்சத்தில் மற்ற நாடுகளுடன் உறவுகளை வளர்க்க முடியும்.

சீனாவின் அறிவியல் ஆய்வுகளை நியாயமான மற்றும் விவேகமான முறையில் பார்க்கவும், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இயல்பான பரிமாற்றத்தை சீர்குலைப்பதை நிறுத்தவும் சீனா சம்பந்தப்பட்ட தரப்பினரை வலியுறுத்துகிறது.

“இலங்கை இந்தியப் பெருங்கடலில் ஒரு போக்குவரத்து மையமாக உள்ளது. சீனா உள்ளிட்ட பல அறிவியல் ஆய்வுக் கப்பல்கள் இலங்கை துறைமுகத்தில் மறுவிநியோகத்திற்காக நிறுத்தப்பட்டுள்ளன. இது வழமை.

“சீனா எப்போதும் ஆழ்கடல்களில் பயணிப்பதற்கான தனது சுதந்திரத்தைப் பயன்படுத்துகிறது மற்றும் கடலோர மாநிலங்களின் அதிகார வரம்புப் பிரதேசங்களில் அவர்களின் கடல்களுக்குள் அறிவியல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு முழுமையாக மதிப்பளிக்கிறது, என்று அவர் கூறினார்.

உயர்தொழில்நுட்ப சீன ஆராய்ச்சிக் கப்பலை அம்பாந்தோட்டையில் நிறுத்துவது அதன் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்தியா இலங்கைக்கு தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கப்பல் செயற்கைக்கோள்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை கண்காணிக்கும் திறன் கொண்டதாக கூறப்பட்டதால், இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு வளர்ச்சியையும் கவனமாகக் கண்காணிப்பதாகக் கூறியுள்ளது.

## கோணேஸ்வரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு பிரதமருக்கும் சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கோரிக்கைக் கடிதம் எழுதியுள்ளார் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவரும், சிவபூமி அறக்கட்டளை, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் தலைவருமாகிய கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத்திருக்கோவிலாகிய திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 2008 இற்குப் பின் அவசர அவசரமாக வீதியின் இருமருங்கிலும் இரத்தினபுரியைச் சேர்ந்தவர்கள் எந்த உத்தரவும் இன்றி தற்காலிக கடைகளை அமைத்தனர்.

அந்தக் கடைகள் தற்போது 58 ஆக அதிகரித்துவிட்டன. இந்தக் கடைகள் அமைப்பவர்களுக்கும், திருக்கோணேஸ்வரக் கோயிலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. திட்டமிட்டு ஆலயச்சூழலை ஆக்கிரமிப்பது போல் இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன. இது தொடர்பாக திருக்கோணேஸ்வர நிர்வாகம் பல இடங்களிலும் முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

தற்போது திருக்கோணேஸ்வரம் செல்லும் பாதைக்கு அருகில் கோவில் சம தரையில் இவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு வருகிறது. 03.08.2022 தொல்லியல் திணைக்களத்தால் திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகசபை தலைவரும், செயலாளரும் அழைக்கப்பட்டு தெருவோரம் வர்த்தகம் செய்வோருக்கு கோவிலுக்கும் சமீபமாக நிரந்தர கட்டடம் அமைக்க தங்கள் தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாகவும் அதற்கு ஆலயம் சம்மதம் தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த சில வருடங்களாக தொல்லியல் திணைக்களம் கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளைத் தடுத்து வருவதை அனைவரும் அறிவர். தேரோடும் வீதியை அகலிக்கத் தடுத்தனர், அழிந்துபோன அன்னதான மடத்தை விஸ்தரிக்கத் தடுத்தனர், வாசலில் பெருங்கோபுரம் கட்டுவதற்கு திணைக்களம் இடையூறுகளை விளைவித்து வருகிறது. தற்போது இந்திய அரசாங்கத்திடம் திருக்கோணேஸ்வரத்தின் பாரிய திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தருமாறு ஆலய அறங்காவலர் சபையும், இந்து சமய நிறுவனங்களும் வேண்டுதல் விடுத்து அவை சாதகமாக அமையும் நேரத்தில் திட்டமிட்டு ஆலய சுற்றாடலை அபகரிக்கும் நோக்கில் நிரந்தரக் கடைகளை கட்டுவதற்கு முன்வந்துள்ளனர்.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கும் அதே வேளையில் அங்கு அவசரமாக கட்டப்படவுள்ள வாணிப கட்டடங்களைத் தடுத்து நிறுத்தவும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலில் வேற்று மதங்களுக்கான கட்டட நிர்மாணப்பணிகள் சுதந்திரமாக நடைபெற்றுவருகின்றன. திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணியை மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து திருப்பணிகளைத் தடுத்து வருகிறார்கள். இது இந்து சமயத்தவர்களுக்கும் தமிழினத்துக்கும் செய்யும் மாபெரும் துரோகமாகும். திருக்கோணேஸ்வரம் இந்திய மக்களுடனும் தொடர்புடைய கோயில். இந்திய அரசாங்கமும் திருக்கோணேஸ்வரர் திருப்பணி தொடர்பாக விரைவில் செயற்படுவதற்கு பிரதமரும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடன் அக்கறை செலுத்த வேண்டும். – என்றுள்ளது.

## பொலிஸ், இராணுவ ,,,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டபூர்வ தன்மையை மனுதாரர்கள் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

பொலிஸ் மா அதிபர், நீதி அமைச்சர், பொது பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, விமானப் படைத் தளபதி, கடற்படைத் தளபதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது அடையாளத்தை காட்டாத, பொலிஸாருக்குச் சொந்தமானது என அடையாளம் காணப்படாத வாகனங்களில் போராட்டக்காரர்கள் அழைத்துச் செல்லப்படுவதுடன் சில நேரங்களில் நீதிவான் ஒருவர் முன் முன்னிலைப் படுத்தப்படாமல் பல மணி நேரம் அடையாளம் தெரியாத இடங்களில் போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர் எனவும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

## ஜனாதிபதி ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, வரவு செலவுத் திருத்தச் சட்டமூலமும் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

## இன்றைய விகாரம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரிக்கையை நிராகரித்து கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அமைதிக்கு குந்தகம் அல்லது சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள பொலிஸாருக்கு அதிகாரம் இருப்பதாக நீதவான் மேலும் வலியுறுத்தினார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரச நிதியைக் கரியாக்கும் கருவிகள்

நாட்டின் பொருளாதாரம் கெட்டுக் குட்டிச்சுவரானமைக்குப் பிரதான காரணம் மோசமான நிதி முகாமைத்துவம்தான்.

அரச நிறுவனங்களாக இயங்கும் பல பொதுக் கட்டமைப்புகள் ஊதாரித்தனமாக நிதியை வீணாக்கி, அரசின் பொருளாதாரத்தையே சின்னாபின்னமாக்கின என்பது அப்பட்டமான உண்மை.

பெரும் வருமானம் ஈட்டக் கூடிய பொது நிறுவனங்கள் எல்லாம் அரச நிர்வாகத்தின் கீழ் வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடும் அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன என்பதுதான் வேதனை தரும் உண்மை.

குறிப்பாக உலகளாவிய ரீதியில் பல விமான சேவை நிறுவனங்கள் கொள்ளை லாபமீட்டும் போது இலங்கை அரசு நடத்தும் சிறீலங்கன் ஏயார் லைன்ஸ் மாத்திரம் நாட்டையே சூறையாடும் அளவுக்கு பெருநஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அதனால் அரசுக்கு ஏறும் கடன் கடப்பாடு தினசரி எகிறிக் கொண்டிருக்கின்றது. இப்போதைய நிலையில் அதன் கடன் கடப்பாடு எழுபதாயிரம் கோடி ருபாவுக்கு அதிகம் என்கிறார்கள்.

பெற்றோலியக் கூட்டுத்தானம், இலங்கை மின்சார சபை என்று லாபத்தில் இயங்கக் கூடிய பல பொது நிறுவனங்கள் பெரு நஷ்டத்தில் இயங்கி, அரச வருமானத்தைக் கரியாக்கிக் கொண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழாமல் என்ன செய்யும்?

இந்தச் சமயத்தில் நெருக்கடியில் வீழ்ந்திருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கு ஆபத்பாந்தவனாக – அநாதரட்சகனாக – சர்வதேச நாணய நிதியம் வரும், வரவேண்டும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படி உதவுதற்கு வரும் சர்வதேச நாணய நிதியம், அப்படிக் கடனாகவும், முற்பணமாகவும் வழங்கப்படும் பெரும் தொகைப் பணத்தை மீண்டும் இப்படி நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்ந்து ஏப்பமிடுவதற்கு அனுமதிக்க மாட்டாது, பார்த்திராது என்பது தெளிவானது.

நாட்டின் நலனுக்கு முக்கியமான கல்வித் துறை, உயர் கல்வித்துறை, சுகாதார மற்றும் மருத்துவத்துறைகளில் சேவை வழங்கும் நிறுவனங்கள் போன்றவை நஷ்டத்தில் – லாபமீட்டாமல் – இயங்குவது வேறு விடயம்.

ஆனால் லாபத்தில் இயங்கக் கூடிய – வர்த்தக வாய்ப்புகள் தாராளமாக நிறைந்த – அரச நிறுவனங்கள் அரச நிதியை ஏப்பமிடும் கட்டமைப்புகளாக இருப்பதை இன்றைய நெருக்கடியில் உதவ முன்வரும் சர்வதேச நாணய நிதியம் அனுமதிக்காது என்பது திண்ணம்.

இலங்கைக்கு உதவுவதாயின் பெரு நஷ்டத்தில் இயங்கி, அரச நிதியைக் கரியாக்கும் நாற்பது பொது நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் முன்நிபந்தனை விதித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், அப்படி நிபந்தனை எதனையும் நாணய நிதியம் இன்னும் விதிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

எது, எப்படி என்றாலும், லாபமீட்டக் கூடிய வர்த்தகத்துறையோடு சம்பந்தப்பட்ட அரச பொது நிறுவனங்கள் நாட்டின் பொதுநிதியை மண்ணாக்கும் ஒரு நிலைமையில் நாட்டுக்கு உதவி வழங்க நாணய நிதியம் முன்வராது என்பதுதான் உண்மை நிலையாகும்.

## சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதாக வெளியான தகவலில் உண்மையில்லை!

### விமல் வீரவன்ஸ மறுப்பு



சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ளேன் என தாம் ஒரு போதும் கூறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சர்வகட்சி அரசாங்கமொன்றுக்காக தமது கட்சி பத்து முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவுகளை கருத்திற் கொண்டு பொதுத் தேசிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றதா என்பது உன்னிப்பாக அவதானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டு, அதற்கு ஆதரவளிக்கும் தேவை ஏற்பட்டால் அது தொடர்பாக மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கப்படும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது!

### அதாவுல்லா கோரிக்கை



சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அரசமைப்பூடாக உறுதிப்படுத்தப்படும் வரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது என தேசிய காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரியது. நாட்டில், ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ஸ்திரம் அவசியம், இந்த ஸ்திரத்தை உருவாக்கும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்.

எந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அதில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு உறுதி செய்யப்படும் வரை நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படக் கூடாது, பட்டம், பணம் மற்றும் பதவிகளுக்காகச் சோரம் போகும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் வரைக்கும் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த முடியாது.

இதனால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தை எமது கட்சி வலியுறுத்துகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைகள் முறைமை எமது நாட்டுக்குத் தேவையில்லை.

சின்னஞ் சிறிய நாட்டை ஒன்பதாகப் பிரித்து நிர்வாகம் நடத்துவதால் செலவுகள் அதிகம். ஏதாவது நாடுகளின் அழுத்தங்களுக்காக இந்த மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டிருந்தால் அந்த நாட்டுக்கு எமது நாட்டின் நிலை தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்தல் அவசியம்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதால் பிரிவினைச்சிந்தனைகள் பலமிழந்துள்ளன. சகல இனங்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் புதிய கலாசாரத்தை காலிமுகத்திடலில் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது போன்று இனவாதமும் ஒழிக்கப்படல் அவசியம். இதை ஒழிக்கும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதுதான் சிறந்தது. – எனத் தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்க விமான நிலைய இரண்டாவது முனைய விஸ்தரிப்பு திட்டம் இடைநிறுத்தம்!

ஜெய்க்கா என்ற ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபன நிதியுதவியுடன், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கும் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலை காரணமாகவே இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள தாய்சேய் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி விமான நிலையத்தின் இரண்டாவது முனைய விரிவாக்கல் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த 57 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை, தமது கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிவுறுத்தும் வரை இந்த நிதியை இடைநிறுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக ஜெய்க்கா அறிவித்துள்ளது.

இலங்கை, தாம் பெற்ற அனைத்து வெளிநாட்டுக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதை கடந்த ஏப்ரலில் இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை, எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்கள் கிடைக்காத காரணத்தால், இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்தத் திட்டத்தின் தொழிலாளர்களின் பணி ஒப்பந்தத்தையும் ரத்து செய்ய தாய்சேய் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இந்த முனையத்தின் கட்டுமானம் பணிகள் 2024 இல் நிறைவடையும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்த முனையம் செயற்படும்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஆண்டுக்கு ஒரு கோடியே 50 லட்சம் பயணிகளை கையாளும் திறனைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒன்றிணைந்து செயலாற்ற இந்தியா - சுவிஸ் இணக்கம்



இந்தியா மற்றும் சுவிட்ஸர்லாந்து இடையே கடந்த செவ்வாய்க்கிழமை 11 ஆவது சுற்று இந்தியா – சுவிட்ஸர் லாந்து வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் புது டெல்லியில் நடைபெற்றன.

இந்த ஆலோசனையின் போது, இருதரப்பு உறவு கள் குறித்து இரு தரப்பினரும் விரிவான ஆய்வு மேற் கொண்டனர். அவர்கள் தங்கள் நீண்டகால ஆற்றல் மிக்க கூட்டாண்மையைப் எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்டதாக விருத்தி செய்ய ஒப்புக்கொண்டனர் என இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

இந்த ஆலோசனைகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் மேற்கு நாடுகளுக்கான பிரிவின் செயலா ளர் ஶ்ரீ சஞ்சய் வர்மா மற்றும் சுவிஸ் மத்திய வெளியுற வுத் துறையின் (FDFA) மாநில செயலாளர் லிவியா லியூ ஆகியோர் இரு தரப்புகளிலும் தலைமை தாங்கினர்.

இருதரப்பு வர்த்தகம் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியதை பாராட்டியதுடன், தங்கள் வர்த்தகத்தை பன்முகப்படுத்துவதன் முக்கியத்து வத்தை அவர்கள் கருத்தில் கொண்டனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொறியியல், சேவைகள், துல்லியமான கருவிகள், இரசாயனங்கள் மற்றும் மருந்துகள் போன்ற துறை களில் 330 க்கும் மேற்பட்ட சுவிஸ் நிறுவனங்கள் இந்தி யாவில் உள்ளன. அதே நேரத்தில் இந்திய நிறுவனங் கள் சுவிட்ஸர்லாந்தில் தொடர்பாடல் தொழில்நுட்பம், மருந்து மற்றும் இயந்திரங்கள் போன்ற துறைகளில் உள் ளன.

இந்தியா – சுவிட்ஸர்லாந்து இருதரப்பு முதலீட்டு ஒப் பந்தம் மற்றும் இந்தியா – வர்த்தகம் மற்றும் பொருளா தார கூட்டாண்மை ஒப்பந்தம் ஆகிய பேச்சுவார்த் தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இரு தரப்பும் கவனத்தில் எடுத்துக்கொண்டமையுடன், அவை தொடர்பில் முன்கூட்டியே முடிவெடுப்பதற்கான அவசி யத்தையும் இரு தரப்புகளும் ஒப்புக்கொண்டன.

புத்தாக்கம், டிஜிற்றல் மயமாக்கல், சுற்றுலா, திறன் மேம்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற் றும் கலை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் ஒத்து ழைப்பை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப் பட்டன.

இரு தரப்பும் ஐ.நாவில் ஒத்துழைப்பு, வரவிருக்கும் ஜி 20 நாடுகள் அமைப்புக்கு இந்தியாவின் தலைமைத் துவம் மற்றும் உக்ரைனின் நிலைமை உள்ளிட்ட பலதரப்பு மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக்கொண்டன.

இரு தரப்பும் ஐ.நா. மற்றும் பலதரப்பு விவகாரங்கள் குறித்து வழக்கமான ஆலோசனைகளை நடத்தவும் ஒப்புக்கொண்டன.

75 வருட இருதரப்பு இராஜதந்திர உறவுகளை அடுத்த ஆண்டு பொருத்தமான முறையில் நினைவு கூர்வது குறித்து ஆராய்ந்தனர். அதையொட்டி மே லும் கலாச்சார மற்றும் மக்களுக்கு இடையேயான உறவாடல்களுக்கு இருதரப்பினரும் உடன்பட்டனர்.

இருதரப்பு உறவுகளில் வேகத்தைத் தக்கவைக்க, கூட்டுப் பொருளாதார ஆணையம், ரயில்வே மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான கூட்டுப் பணிக்குழுக்கள் மற் றும் நிதி உரையாடல் போன்ற நிறுவன வழிமுறைக ளின் உயர்மட்ட பரிமாற்றங்கள் மற்றும் வழக்கமான சந்திப்புகளைத் தொடரவும் இரு தரப்பும் ஒப்புக் கொண்டன.

பேச்சுவார்த்தை நட்பு ரீதியில் நடைபெற்றது. சுவிட் ஸர்லாந்தில் உள்ள பேர்னில் பரஸ்பரம் வசதியான திகதியில் அடுத்த கட்ட ஆலோசனையை நடத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

(மூலம்:ஏ.என்.ஐ.)






## இந்தியக் கடல் எல்லைக்குள் புகுந்த பாக். போர்க் கப்பல் விரட்டப்பட்டது

பாகிஸ்தான் கடற்படையின் போர்க்கப்பல் ஆலம்கிர், நேற்று முன்தினம் குஜராத் கடல் பகுதியில் உள்ள இரு நாடு களுக்கும் இடையிலான கடல் எல்லை கோடு பகுதியை கடந்து இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்தது. உடனடியாக இதை அறிந்த இந்திய கடற்படையினர், இந்திய கடலோர காவல் படையின் டோர்னியர் விமான கப்டனுக்குத் தகவல் அளித்த னர். இதையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த இந்திய கண் காணிப்பு விமானம், பாகிஸ்தான் போர்க் கப்பலின் இருப்பிடம் குறித்து எச்சரிக்கை விடுத்ததுடன் அதன் பகுதிக்குத் திரும்பும் படி வலியுறுத்தியது. டோர்னியர், ஆலம்கிர் மீது வட்டமிட்டுக் கொண்டே இருந்ததாகவும், கடலோர காவல்படை அதிகாரி கள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் போர்க் கப்பல் அத்துமீறியதன் நோக்கத்தை அறிய வானொலி மூலம் இந்தியத் தரப்பினர் பாகிஸ்தான் கப்பல் கப்டனுடன் தொடர்பு கொண்ட நிலையில் அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து டோர்னியர் விமானம் மூன்று முறை பாகிஸ் தான் போர்க்கப்பலுக்கு முன்னால் பறந்து எச்சரித்தது. இதை யடுத்து பின்வாங்கிய ஆலம்கீர், பாகிஸ்தான் பகுதிக்கு திரும் பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சீனாவின் மிகவும் தொன்மையான மரப் பாலம் தீப்பற்றி எரிந்து நாசம்



சீனாவில் கலாச்சார முக்கியத்துவம் கொண்ட – மிகத் தொன்மையான – வனான் என்று பெயரிடப் பட்டுள்ள மரப் பாலம் தீப்பற்றி எரிந்து நாசமானது. மரத்தின் மூலம் கலையம்சம் மிக்க தொழில்நுட்பத் துடன் வடிவமைக்கப்பட்ட இது உலகின் 'அமைதிக் கான பாலம்' என்றும் அழைக்கப்பட்டது.

பொதுவாகப் பாலங்கள் கற்களால் கட்டப்படும். ஆனால் இது முற்றிலும் கலைநயத்துடன் மரத்தி னால் அமைக்கப்பட்டிருந்தது.

சீனாவின் கிழக்கே புஜியான் மாகாணத்தில் பிங் னன் கவுண்டி பகுதியில் 960 ஆம் ஆண்டு முதல் 1127 ஆம் ஆண்டு வரை சாங் வம்சம் ஆட்சி செய் தது. அந்த காலகட்டத்தில் மரத்தில் உருவான நீண்ட மரப்பாலம் ஒன்று எழுப்பப்பட்டது. இது 98.3 மீற்றர் நீளம் கொண்டது. இந்த மரப்பாலம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதுபற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட னர். சுமார் ஒரு மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீப்பிடித்து எரி யத் தொடங்கியதும் முதல் 20 நிமிடத்திலேயே மரப் பாலம் எரிந்து கீழே விழத் தொடங்கியது.

நீண்ட வளைவுகளை கொண்ட இந்த பாலம் இயற்கை பேரிடர் காரணமாக எரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

இது குறித்து சீன நிபுணர்கள் கூறியதாவது:–

இந்தப் பாலத்துக்கு மர்ம மனிதர்கள் யாராவது




தீ வைத்திருக்க வேண்டும். தண்ணீரின் மேல் இந்த பாலம் அமைந்துள்ளது. எனவே தொடர்ச்சியாக தீப்பிடித்து எரிய வாய்ப்பு இல்லை. யாரோ தீ வைத் ததால்தான் பாலம் எரிந்துள்ளது. வனான் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பாலம் உலகின் அமை திக்கான பாலம் என்றும் அழைக்கப்படுகிறது. பொதுவாக பாலங்கள் கற்களால் கட்டப்படும். கலாச் சார முக்கியத்துவம் கொண்ட இந்த பாலத்தை மரத் தின் மூலம் தொழில்நுட்பத்துடன் வடிவமைத்திருந்த னர். வளைவுகளுடன் கூடிய 98.3 மீற்றர் நீளம் கொண்ட பாலத்தை அமைப்பது மிகவும் கடினம். ஆற்றின் மீது கலைநுட்பத்துடன் மரத்தில் சீனர்க ளின் உள்ளார்ந்த அறிவை நிரூபிக்கும் வகையில் கட்டப்பட்ட பாலத்தை நாம் இழந்துள்ளோம். – இவ் வாறு சீன நிபுணர்கள் தெரிவித்தனர்.

# ரணில் கடினமான நேரத்தில் பொறுப்பேற்று நாட்டை மிகச் சரியாக வழிநடத்துகிறார்

## இத்தேபானே தர்மலங்கார தேரர் புகழாரம்





மிகவும் கடினமான சந்தர்ப்பத்தில் நாட்டை பொறுப்பேற்று சரியான வழியில் வழிநடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடிந்துள்ளது என ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ தர்ம மஹா சங்க சபையின் மாநாயக்கரும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தருமான இத்தேபானே தர்மலங்கார தேரர் தெரிவித்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோட்டே ருக்மலே தர்ம விஜயாலோக விகாரைக்கு சென்று மாநாயக்கர் மற்றும் அவர் தலைமையிலான பிக்குமாரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின்னர் கருத்து வெளியிடும் போதே தர்மலங்கார தேரர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட தர்மலங்கார தேரர் தெரிவித்தவை வருமாறு –

நீங்கள் தொன்று தொட்டு மகா சங்க சபையினருடன் மிக நெருக்கமாக செயற்பட்ட தலைவர். நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்தமை தொடர்பாக மகா சங்க சபையினர் என்ற வகையில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

உங்களுக்கு அரசியல் தொடர்பான சிறந்த புரிதலும் அனுபவமும் இருக்கின்றது. அண்மையில் உங்களது வீடு மற்றும் நீங்கள் உயிரை போல் நேசித்த நூல்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம்.

கடந்த காலங்களில் சில பிக்குமார் மற்றும் சமயத் தலைவர்கள் தமது வரம்புகளை மீறி அரசியலில் ஈடுபட்டமைதொடர்பாகநாங்கள்கவலையடைகின்றோம்.

மகா சங்கத்தினர் என்ற வகையில் எமக்கு உங்களுக்கு ஆலோசனைகளை மாத்திரமே வழங்க முடியும். அரசுக்கும் மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும் கடந்த காலங்களில் அப்படி நடக்காத காரணத்தால் மோதலான நிலைமையைச் சந்திக்க நேரிட்டது. எமது நாட்டில் காணப்பட்ட நிலைமையால் அரசமைப்பில்இருக்கும்எதனையும்நடைமுறைப்படுத்த முடியாது போனது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆட்சியாளர் என்ற வகையில் நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள். அது தவறு அல்ல. நீங்கள் இந்த நாட்டின் சகல மக்களுக்கும் அமைதியாக வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம் என தர்மலங்கார தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, தனிப்பட்ட ரீதியில் எப்படியான நஷ்டங்கள் ஏற்பட்டாலும் நாடு மற்றும் மக்களின் பாதுகாப்புக்காகத் தான் அரசமைப்புச் சட்டத்துக்கு அமைய செயற்பட நேரிடும் எனக் கூறியுள்ளார்.

நாடு ஒன்றை முன்நோக்கி கொண்டு செல்ல சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

விகாரைக்கு சென்ற ஜனாதிபதியை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர்கள் தயா கமகே மற்றும் அனோமா கமகே ஆகியோர் வரவேற்றனர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களினால் வியாபார நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு!

## மல்லாவி வர்த்தகர்கள் விசனம்

முல்லைத்தீவு – துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான மல்லாவி எரிபொருள் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுச் செல்வதற்காக தரித்து நிற்கும் வாகனங்கள் கடை வீதி வாயில்களை மறைத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என வர்த்தகர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மல்லாவி வர்த்தக சங்கம், கடிதம் மூலம் துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்குக் கோரிக்கை முன்வைத்துள்ளது.

கடை வாயில்களில் நீண்ட நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களால் வர்த்தகர்களாகிய தாமும், வாடிக்கையாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் எனக் கடிதமொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தமது வியாபார நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குரங்குக் காய்ச்சலை கண்டறியும் கருவிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தன

*மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைராலஜி துறை, குரங்கு காய்ச்சலைக் கண்டறிவதற்கான ஆர்.டி.-பி.சி.ஆர். கருவிகளை இந்தியாவில் இருந்து பெற்றுள்ளது.*

*எனினும் இதுவரை இலங்கையில் குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்படவில்லை.*

*உலக சுகாதார அமைப்பு, கடந்த ஜூலை 23 ஆம் திகதியன்று குரங்கு காய்ச்சல் தொடர்பில் சர்வதேச பொது சுகாதார அவசரநிலையை அறிவித்துள்ளது.*

*இதனையடுத்து அமெரிக்காவும் இந்த வாரம் குரங்கு காய்ச்சலை பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்துள்ளது.*

*இந்தநிலையிலேயே இலங்கையும் குரங்கு காய்ச்சலை கண்டறிவதற்கான கருவிகளைத் தருவித்துள்ளது என்று வைத்திய கலாநிதி ஜூட் ஜெயமஹா தெரிவித்துள்ளார்.*

*இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை மற்றும் புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனம் ஆகியன இரண்டு வகையான ஆர்டி-பிசிஆர் கருவிகளை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# முட்டை மற்றும் கோழி இறைச்சிகள் சந்தையில் கிடைக்காமல் போகலாம்

கால்நடைத் துறையை அத்தியாவசிய சேவையாக மாற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டு மக்கள் தமது நாளாந்த புரதத் தேவையில்மூன்றில் ஒரு பங்கை விலங்குப் புரதத்தில்இருந்துபெறவேண்டும்என கலாநிதி உஷான் பல்லேகம தெரிவித்துள்ளார்.

பால் உற்பத்திப் பொருள்கள் உள்ளிட்டவை சந்தையில் கிடைக்காமல் போகலாம் கோழிப்பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கோழி, முட்டை மற்றும் பால் தொடர்பான உள்ளூர் உற்பத்திகள் சந்தையில் கிடைக்காது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹற்றன் வனராஜா பகுதியில் மரத்திலிருந்த சிறுத்தை சாவு!

ஹற்றன் –வனராஜா சமர்வீல் தோட்டப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுத்தை புலியை உயிருடன் பிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை தோல்வியடைந்துள்ளதாக நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமர்வில் தோட்டப் பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த நிலையிலேயே காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே சிறுத்தை மரத்தில் ஏறியுள்ளது.

இதனையடுத்து, சிறுத்தையை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில் நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தமையுடன், சிறுத்தை ஏறிய மரத்தை வெட்டியுள்ளனர்.

இதன்போது சிறுத்தையின் மீது மரம் விழுந்ததால் சிறுத்தை உயிரிழந்ததாகவும் பிரேத பரிசோதனைக்காக சிறுத்தையை ரந்தெனிகல வனவிலங்குகள் திணைக்களத்துக்கு கொண்டு செல்வதாகவும் வனவிலங்குகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பொறியில் அமைக்கப்பட்டிருந்த கம்பியால் சிறுத்தையின் உடலில் காயங்கள் இருப்பதால் இது தொடர்பில் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை அசௌகரியத்துக்கு உட்படுத்தியமையை கண்டித்து வடக்கில் போராட்டம்!

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை வேண்டுமென்றே அசௌகரியங்களுக்கு உட்படுத்தியமைக்கு எதிராக வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலரின் உத்தியோகபூர்வ வதிவிடம் ஆகியவற்றில் கடந்த 30 ஆம் திகதி இரவு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு 65 லீற்றர் எரிபொருளை மீட்டு இருந்தனர்.

அலுவலக மின் பிறப்பாக்கியின் தேவைக்கான 50 லீற்றர் டீசல், பிரதேச செயலரின் சொந்த பாவனைக்காக சேமித்து வைத்திருந்த 10 லீற்றர் பெற்றோல் மற்றும் 5 லீற்றர் மண்ணெண்ணெய் என்வற்றையே பொலிஸார் மீட்டு இருந்தனர் என பிரதேச செயலர் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரதேச செயலரை வேண்டும் என்றே பழிவாங்கும் நோக்குடன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் நடந்து கொண்டனர் எனவும், திட்டமிட்டு பிரதேச செயலரை அசௌகரியத்துக்கு உட்படுத்தி அவரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக பொலிஸார் நடந்து கொண்டனர் எனவும், அதனால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கோரி நிர்வாக சேவை வடக்கு கிளை சங்கம் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.



வடக்கில் உள்ள பிரதேச செயலகங்களில் நேற்று திங்கட்கிழமை காலை 09 மணி முதல் 11 மணி வரையில் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஊழியர்கள் ஈடுபட்டமையுடன், கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

## மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் இன்று அறிவிப்பு

மின்சாரக் கட்டணங்கள் திருத்தம் தொடர்பில் இன்று (செவ்வாய்க்கிழமை) உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட உள்ளது.

நிதியமைச்சு, மின்சார அமைச்சு மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது. புதிய கட்டண திருத்தம் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அங்கு விவாதிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, பொதுக் கலந்தாய்வுக்கான கட்டணத் திருத்தங்களை முன்னதாக வெளியிட்டது. அதற்கான ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை கருத்தில் கொண்டு மின்சாரக் கட்டணங்கள் திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உரப்பையால் முகத்தைமூடி பல லட்சம் ரூபா திருட்டு!

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள புனானை பிரதேசத்திலுள்ள பலசரக்கு கடை ஒன்றின் கூரையை உடைத்து அங்கிருந்த 3 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு பண்டல் சிகரெட் என்பவற்றைத் திருடிச் சென்ற ஒருவரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர். ரிதிதென்னையில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கடையை திறந்த போது கடையின் கூரையை உடைத்து பணம் மற்றும் சிகரெட் என்பன திருடப்பட்டுள்ளதைக் கண்ட கடை உரிமையாளர் பின்னர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு சென்று அங்கு பொருத்தியுள்ள சி.சி.ரி.வி. கமராவை சோதனையிட்டபோது அதில் முகத்தை உரப்பையால் மூடியவாறு திருட்டுச்சம்பவம் இடம்பெற்றது தெரியவந்த நிலையில் தொடர் விசாரணையில்




திருடனை கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட திருடன் ரிதிதென்னை ஜெயந்தியால பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் ஏற்கனவே மடிக்கணணி, மற்றும் பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புபட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேகநபரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பளு தூக்கல் போட்டியில் யாழ்.இளைஞர் சாதனை!

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

தேசிய ரீதியில் கடந்த 06 ஆம் திகதி பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று, மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோ கிராமையும் , benchpress பிரிவில் 175 கிலோ கிராமையும், – eadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார்.

இதில் squat மற்றும் –eadlift பிரிவில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த இளைஞன் தேசிய ரீதியில் நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் தேசிய ரீதியில் மூன்று சாதனைகளை படைத்துமூன்றுதங்கப்பதக்கங்களைவென்றுள்ளதை அடுத்து பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

## வெள்ளம் பாதித்த மக்கள் பிரச்சினையை ஆராய்வதற்கு பந்துல மலையகம் விஜயம்!



மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால் பல பகுதிகள் பாரிய சேதங்களை எதிர் கொண்டுள்ளன. அத்தோடு, தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலங்கள் வெள்ளத்தின் அள்ளுண்டு செல்லப்பட்டதால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக பெருந்தெருக்கள், போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாவலப்பட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

மத்திய மலைநாட்டில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக இடிந்து விழுந்த நாவலப்பிட்டி – இங்குருஓயா பாலத்தை இதன்போது அவர் பார்வையிட்டதோடு, வட்டவளை ஹைட்ரி தோட்டத்தில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் அழைப்பின் பேரில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குணவர்தன, நாவலப்பிட்டி – இங்குரு ஓயா பாலம் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக இங்குரு ஓயா பகுதிக்கு செல்ல முடியாத நிலை தொடர்பில் மக்களிடம் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

நாவலப்பிட்டி பிரதேசமே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தால் பல உயிர்கள் பலியாகியுள்ளன எனவும், அங்கு வாழ்ந்த மக்களின் பல வீடுகள் வெள்ளத்தால் அழிந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை விசேட தேவையாகக் கருதி தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# அனைத்து வாகன சட்ட விதிகளும் வழமைபோன்று நாட்டில் இடம்பெறும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு



கொழும்பு, ஒக. 09

நேற்று (திங்கட்கிழமை) முதல் அனைத்து வாகன சட்ட விதிகளும் வழமைபோன்று இடம்பெறும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மேலும் அபராதம் கட்டுவதற்கான சீட்டுக்களை விநியோகித்தல், மதுபோதையில் வாகன ஓட்டுநர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை என்பன மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் நாடு வழமையான நிலைக்குத் திரும்பியுள்ள நிலையில் பெருமளவிலான வாகனங்கள் சேவையில் ஈடுபடுகின்றதோடு வேலைக்காக செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மோட்டார் சைக்கிள் யாழில் நேற்று திருட்டு!



யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

யாழ்.நகரை அண்டிய சிவகுருநாதன் வீதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 'சுப்பர் கப்' ரக மோட்டார் சைக்கிளே நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை களவாடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# சிந்தங்கேணி பகுதியில் விபத்து இளைஞர் ஒருவர் படுகாயம்!





யாழ்ப்பாணம், ஒக. 09

சித்தங்கேணி – வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

நேற்றுக் காலை சித்தங்கேணியில் இருந்து வட்டுக்கோட்டை பக்கமாக சென்ற மகேந்திரா வாகனம் வீதியை விட்டு பிழையான பக்கத்துக்குள் பாய்ந்து விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் தனது வீட்டின்படலையில்மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டு படலையினை திறந்து கொண்டிருக்கும் போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதனால் இளைஞரின் ஒரு கால் முற்றாக முறிந்துள்ளதுடன் மற்றைய காலிற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் இளைஞரின் மோட்டார் சைக்கிள் முற்றாகவே சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவசரசேவை அம்புலன்ஸ் மூலம் இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

வாகனத்தின் சாரதியை கைது செய்த வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகத் தரவரிசைகளில் கொழும்பு பல்கலை முதலிடம்!

உலக பல்கலைக்கழகங்களின் 'வெபோமெட்ரிக்ஸ்' தரவரிசையின் படி இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கொழும்புப் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கமைய, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தையும், பேராதனை பல்கலைக்கழகம் மூன்றாமிடத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகம் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்த வரிசையில், ருஹுணு, களனி, ரஜரட்டை, யாழ்ப்பாணம், வடமேற்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் திறந்த பல்கலைக்கழகம் முறையே ஐந்தில் இருந்து 12 ஆவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜூலை மாதத்துக்கான இந்த தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, அமெரிக்காவின் 'ஹார்வர்டு' பல்கலைக்கழகம், உலகின் சிறந்த பல்கலைக்கழகமாக முதலிடத்திலும், 'ஸ்டான்போர்ட்' பல்கலைக்கழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளன. கடந்த ஆண்டும் இந்த தரவரிசையில் இதே பல்கலைக்கழகங்கள் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்திருந்தன.

இலங்கையில் உள்ள கொழும்பு பல்கலைக்கழகம்உலகதரவரிசையில் 1,531 வது இடத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 1,964 ஆவது இடத்தையும், பேராதனை பல்கலைக்கழகம் 1,974 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட தரவரிசையில்இலங்கைப்பல்கலைக்கழகங்களில் கொழும்புப் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றிருந்ததுடன், உலகத் தரவரிசையின்படி 1,591ஆவது இடத்தையும் பெற்றிருந்தது. அதன்படி இந்த வருடம் உலக தரவரிசையில் 30 இடங்கள் முன்னேறியுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் எரிவாயு திருட்டு; ஆறு சந்தேகநபர்கள் கைதாகினர்!

ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாப் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 52 வெற்று கொள்கலன்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாப் எரிவாயுநிறுவனத்தின்களஞ்சியசாலையை உடைத்து 7 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 52 வெற்றுச் கொள்கலன்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட கொள்கலன்களும் கைப்பற்றப்பட்டன.

மேலும், விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

# இங்கிலாந்தில் விளையாட்டுப் போட்டியில் காணாமல் போன இலங்கை அணி வீர, வீராங்கனைகளை தேடும் பொலிஸார்!

இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள சென்றிருந்த நிலையில் காணாமல் போன இலங்கை அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீர, வீராங்கனைகளை கண்டுபிடிக்க மெட்ரோபொலிட்டன் பொலிஸாரும் மேற்கு மிட்லண்ட்ஸ் பொலிஸாரும் கூட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகளுக்காக இலங்கை அணிகளின் நிர்வாகிகள், அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீர, வீராங்கனைகள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர்.

இலங்கை ஜூடோ அணியின் முகாமையாளர் மற்றும் ஜூடோ வீராங்கனை, மல்யுத்த வீரர் ஆகியோர் முன்னதாக காணாமல் போயினர்.

கடந்த 5 ஆம் திகதி இலங்கை குத்துச் சண்டை அணியின் வீரர் ஒருவரும் காணாமல் போனார் என தெரியவருகிறது.

இந்த குத்துச் சண்டை வீரர், குத்துச் சண்டை போட்டி ஒன்றை பார்த்துக்கொண்டிருந்த போது கழிவறைக்கு செல்ல வேண்டும் என பயிற்சியாளரிடம் கூறி விட்டுச் சென்றுள்ளமையுடன் திரும்பி வரவில்லை.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இலங்கை அணிகளின் வீர, வீராங்கனைகள் காணாமல் போகின்றமையை அடுத்து, அணிகளின் நிர்வாகிகள் விளையாட்டு வீரர்களின் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொண்டுள்ளனர். காணாமல் போன குத்துச் சண்டை வீரரின் கடவுச் சீட்டும் அணி நிர்வாகிகளிடம் இருப்பதாக கூறப்படுகிறது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இலங்கை அணிகளின் வீரர்களில் இதுவரை சுமார் 10 பேர் காணாமல் போயுள்ளனர்.

இலங்கை அணிகளின் வீரர்கள் உட்பட அதிகாரிகளுக்கு இங்கிலாந்தில் தங்கியிருக்க 150 நாள்களுக்கான விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை முன்னதாக காணாமல் போன ஜூடோ அணியின் வீராங்கனை மற்றும் பயிற்சியாளர் இருக்கும் இடம் கண்டறியப்பட்டுள்ளது.

180 நாள்களுக்கான விசா அனுமதி இருப்பதால், அவர்கள் கைது செய்யப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இலங்கை எதிர்நோக்கி வரும் மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை அணியின் வீரர்கள் மற்றும் அதிகாரிகள், இங்கிலாந்தில் புகலிடம் கோருவதற்காக இவ்வாறு தப்பியோடி இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-87**

**இந்திய ஒப்பந்தம்**

இதனை ஒட்டி ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அது எனது கருத்தாக்கத்திற்காகவும் பலவிதமான வியாக்கியானங்களுக்கு வசதிபடி ஆக்கப்பட்டு இருந்மையாலும் தருகிறேன். அதில் நடந்தவற்றை மதியுரைஞர் பாலசிங்கம் ஆதாரப்படுத்துகிறார்.

இந்தியாவின் தூதுவர் டிக்ஸிற், அதைத் தொடர்ந்து புலனாய்வுத் துறையின் நாராயணன், வெளிவிவகார இணைச் செயலாளர் சகாதேவ், வெளிவிவகார அமைச்சின் நிகில் சேத், இந்தி



பிரபாவும் டிக்ஸிற்றும்

யத் தூதரகத்தின் ஹர்தீப் பூரி எனப் பலரும் ஒவ்வொருவராக பிரபாகரன், பாலசிங்கம், யோகியுடன் வந்து பேசியும் அவர்கள் இந்த ஒப்பந்தத்திற்கு இணங்க மறுத்திருந்தனர். இந்த மறுதலிப்பு பிரதமர் ராஜீவுக்குத் தெரியப்படுத்தப்பட அவர் எம்.ஜி.ஆரின் அனுசரணையை நாடுவதற்கு தீர்மானித்தமையால் 26 ஜூன் 1987 பிரபாகரனும், யோகியும், பாலசிங்கமும் அவரைச் சந்திப்பதற்கு புதுடில்லியில் இருந்து தமிழ்நாட்டு இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தாங்கள் எம்.ஜி.ஆரைச் சந்திக்க அழைத்துச் செல்லப்பட்ட போது அவரோடு தமிழ்நாட்டின் உணவுத்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனும், டிக்ஸிற்றும் இருந்தனர் என பாலசிங்கம் குறிப்பிடுகிறார்.

அவரது வார்த்தையிலேயே பார்ப்போம்.

"டிக்ஸிற் தொடர்ந்தும் ஒப்பந்தத்தின் சரத்துக்களைப் பற்றிப் பேசித் தாங்கள் பலவாறாக கஷ்டப்பட்டு, சிங்களப் பேரினவாதிகளை வடக்கையும் கிழக்கையும் இணைந்த தமிழ் மொழி பிரதேசமாக ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறோம், அது இணைந்த தமிழ் தேசமாக இருக்கும், இது மிகப்பெரிய – குறிப்பிடத்தக்கதான – சாதனையாதனால் அதற்கு தமிழ் மக்கள் யாவருமே நன்றியாக இருக்க வேண்டும் என விவரித்தார். எங்களைச் சுட்டிக்காட்டி எல்லாத் தரப்புக்களும் – ஆயுததாரிகள், விடுதலைக் கூட்டணி யாவரும் – ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், இங்கிருக்கும் இவர்களை தவிர எனக் குற்றம் சாட்டினார். இவர்கள் தனி நாடு என்ற ஒன்றைத் தவிர, மாற்றான எதுவும், எவ்வளவுதான் நியாயமானதானாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், ஆனால் இந்திய அரசு இறைமையுள்ள தமிழ்நாடு ஒன்று ஶ்ரீலங்காவில் அமைவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது, அவர்கள் இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பதால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றார்.

அதனைத் தனது நாடியில் கையை வைத்தவாறு எம்.ஜி.ஆர். கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது யோகி இடையில் இந்த மாகாண சபை அமைப்பு முறைகளில் எதுவும் கணிசமானவைகளாக இல்லை, இந்த அமைப்பு முறை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணைப்பு தற்காலிகமானது, அப்பகுதிப் பொதுமக்களின் பொதுசன வாக்கெடுப்புக்கு அமையவே நிரந்தரமாகும் என வந்தால் அங்கு சிங்கள, முஸ்லிம் மக்கள் எதிராகவே வாக்களிப்பார்கள், அதனால் வடக்கும், கிழக்கும் நிரந்தரமாக பிரிவு பட்டவையாகவே இருக்கும், அப்படியான குறைபாடுகள் உள்ள நிலையில் இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

யோகியின் குறுக்கீடு டிக்ஸிற்றுக்கும் அவருக்குமிடையே கடும் வாதப்பிரதிவாதங்களை தோற்றுவித்தது.

"திரு. பூரி யாழ்ப்பாணத்தில் உங்களைச் சென்ற கிழமை சந்தித்து ஒப்பந்தத்தின் சரத்துகளை விளங்கப்படுத்திய போது அதை ஆதரித்தீர்கள். ஆனால் இப்போது மாறி நிற்கின்றீர்கள். உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று டிக்ஸிற் சொல்ல யோகி ஒப்பந்தம் பற்றி தங்களிடம் எதுவுமே பேசப்படவில்லை என மறுத்தார்.

அப்படியானால் நான் பொய் சொல்



பிரபாவும் யோகியும்

லுகிறேன் என்று கூறுகிறாரா என்ன டிக்ஸிற் சீற, யோகி அப்படி இல்லை, நீங்கள் உண்மையைக் கூறவில்லை என்றே தெரிவித்தேன் என மறுத்துவரைத்தார்.

இந்த வாக்குவாதங்கள் காரசாரமானவையாகவும் வெறுப்புகளாகவும் மாறுவதை எம்.ஜி.ஆர். அவதானித்தார்.

அவர் டிக்ஸிற்றிடம் பவ்வியமாக நீங்கள் எங்களைக் கொஞ்சம் தனியாகப் பேசுவதற்கு வசதியாக வெளியேறி, இடைவெளி தாருங்கள் எனக் கேட்க, டிக்ஸிற் வெளியேறி அங்கிருந்த தாழ்வாரங்களில் உலாத்திக் கொண்டிருந்தார்." – என விவரித்தார் பாலசிங்கம்.

**இந்திய தூதுவர் டிக்ஸிற்றின் ஆவேசமும் ஆணித்தரமும்**

எம்.ஜி.ஆரிடம் பிரபாகரன், யோகி, பாலசிங்கம் ஒப்பந்தத்தை பற்றி ஆதங்



பிரபாவும் பாலாவும்

கங்களாக வைத்தவை டிக்ஸிற்றோடு நடந்த ஆக்ரோஷமான கலந்துரையாடல்களின் விவரங்களே. ஆதலால் அவை பற்றிய பாலசிங்கத்தின் குறிப்பின் சாரத்தை பார்ப்பது நல்லது.

தாங்கள் புதுடில்லிக்குக் கூட்டி வரப்பட்டதும், டிக்ஸிற் தங்களைச் சந்தித்து இந்தியாவுக்கும் ஶ்ரீலங்காவுக்கும் இடையில் ஒப்பந்தம் என்று உருவாகியுள்ளது, அதில் கையெழுத்திடுவதற்காக ராஜீவ் காந்தி நாளை கொழும்பு செல்ல இருக்கிறார், இந்த ஒப்பந்தம் தமிழர்களது இனப்பிரச்சினைக்கான ஒரு நியாயமான தீர்வைத் தருகிறது, இதை நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி ஒப்பந்தத்தின் நகலை தனது பக்கெட்டில் இருந்து எடுத்து பாலசிங்கத்திடம் தந்தார். 'இதைப் படித்துப் பிரபாகரனுக்கு விளங்கப்படுத்துங்கள். நான் இரண்டு மணித்தியாலங்களில் வருவேன். ஓர் ஆமோதிப்பான பதிலை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்' – என்று சொல்லிவிட்டு விட்டுச் சென்றுவிட்டார். பாலசிங்கம் டிக்ஸிற்றால் தரப்பட்ட ஒப்பந்த ஆவணத்தை பிரபாகரனுக்கு மொழிபெயர்த்து அதனது உள்ளடக்கங்களையும் தாக்கங்களையும் விளங்கப்படுத்தினார்.

அந்த ஒப்பந்தம் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், நிறைவு கொள்ளாததாகவும், சில சரத்துக்கள் நிச்சயம் இல்லாதவையாகவும், பல பொருள் கொள்ளக்கூடியவையாகவும் இருந்தன.

அந்த ஆவணம், நாட்டினது பன்முகத்தன்மையான சமுதாய அமைப்புகளை வலிமைப்படுத்திக் கூறி, அங்கு சில தேசிய இனங்கள், குழுமங்கள் தனித்துவமாக, பாரம்பரியமாக, தங்களது மொழி, கலாச்சாரங்களைப் பேணிக் கொண்டு வாழ்வதை ஏற்ற போதும் தமிழர் தாயகம் ஒரு தேசம், ஒரு மக்கள் என்ற கோட்பாட்டை நிராகரித்திருந்தது. ஶ்ரீலங்காவின் ஒற்றுமை, இறைமை, அதன் நிர்வாகக் கட்டமைப்புகள் அடங்கிய நிலப்பரப்புகளின் உரிமை என்பனவற்றை மதித்து, ஒற்றையாட்சியில் அமைந்த குடியரசு அமைப்பின் அடிப்படையிலேயே தீர்வு அமைய வேண்டும் என வழிமொழிந்தது. ஆவணத்தில் இருந்த உறுதியான அம்சம் எதுவென்றால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாக தமிழ் பேசும் மக்கள் குடியிருந்த நிலங்கள் என்பதும், அவர்களின் ஆளுமையான பிரதேசங்கள் என்ற தெளிவுப்பாடும்தான்.

அதன் அடிப்படையில் அடுத்த முக்கியமான சரத்து வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அலகாக அமையும் என்பது. ஆனால் அந்த இடைக்கால அமைப்பு அங்கு வாழும் பல இனத்தவர்களின் பொது வாக்குகளினால் நிரந்தரமாக அமையும் என்றே கூறப்பட்டது.

ஒப்பந்தம் நிர்வாக அலகாக இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தையும் அதற்கு கவர்னர், முதலமைச்சர், அமைச்சர் குழு என்பவையும் அமையும் என அறிவுறுத்தல் தந்தாலும் மாகாண அலகின் அதிகாரங்களோ, அதன் பணிகளோ விவரிக்கப்படவில்லை.

ஆனால் ஶ்ரீலங்கா, இந்திய அரசுகளுக்கு இடையையும், தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் 4 மே 1986 இற்ககும் 19 டிசம்பர் 1986 இற்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் அடிப்படைகளில் அவை அமையும் எனக் காட்டப்பட்டது. அடுத்து இவற்றில் தீர்மானிக்கப்படாது மிகுதியாக இருக்கும் விடயங்கள் இந்திய, ஶ்ரீலங்கா அரசுகளுக்கு இடையே ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு கிழமைகளுக்குள் தீர்க்கப்படும் என்றும் அதில் ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் இந்திய, ஶ்ரீலங்கா அரசுகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி டிசம்பர் 19ஆம் திகதி வரை நடத்திய பேச்சுக்களின் அடிப்



பிரபாவும் எம்.ஜி.ஆரும்

படைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என ஏற்கனவே எழுத்தில் தெரிவித்து இருந்தது. ஆதலால் உத்தேச ஒப்பந்தம் தமிழ் மக்களது அபிலாசைகளை உள்ளடக்கவில்லை எனப் புலிகள் கருதினர்.

உத்தேச ஒப்பந்த வாசகத்தின் மற்றொரு விடயம் புலிகளைப் பேரதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது. அதன் விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்)